## ஜும்ஆ குத்பா பேருரை

# "சோதனைகளும் குழப்பங்களும் நிறைந்த காலங்களில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து நம்பிக்கையுடன் வாழ்தல் "

**ஹிஜ்ரி 1448 ஸஃபர் மாதம் 10, ஆங்கில தேதி 24 / 07 / 2026 கி.பி.**

வணக்கத்திற்குரியவனுமாகிய, என்றென்றும் நிலைத்திருப்பவனுமாகிய, மற்றும் நன்றிற்கும், புகழுக்கும் தகுதியான அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்! அளப்பரிய கண்ணியமும் பெருமையும் மிக்கவனான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாரும் இல்லை என நான் சாட்சியமளிக்கிறேன். மேலும், நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும், தூதரும், மனிதர்களிலேயே சிறந்தவரும், இறைத்தூதர்களிலேயே மிகத் தூய்மையானவரும் ஆவர் என்றும் சாட்சியமளிக்கிறேன். அல்லாஹ் அவருக்கும், அவருடைய தூய்மையான குடும்பத்தாருக்கும், நற்பண்புகள் மிக்க தூய்மையான தோழர்களுக்கும், நியாயத் தீர்ப்பு நாள் வரை அவர்களை அழகிய முறையில் பின்பற்றுவோருக்கும் அருளும் சாந்தியும் பொழிவானாக!

**இறைதுதிக்குப் பின்னர் :**

**ஈமான் கொண்ட சகோதரர்களே!** நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள. மேலும் அளவற்ற அருளாளன் வழங்கியுள்ள அருட்கொடைகள் மீது திருப்தியடைவதைக் கொண்டும், அவனின் பங்கீடு மற்றும் அவனின் முடிவின் மீதும் நண்ணம்பிக்கை வைப்பதைக் கொண்டும் உங்கள் உள்ளங்களை நிரப்புங்கள். ஏனெனில், தன் இரட்சகனையும் அதிபதியையும் நம்பியவன் ஒருபோதும் நஷ்டம் அடையமாட்டான்; அவனுடைய பாதுகாப்பைப் புகலிடமாகக் கொண்டவன் ஒருபோதும் தோற்றுப்போக மாட்டான். அல்லாஹ் தன் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

﴿ وَلَقَدْ أَرْسَلْنَا مِن قَبْلِكَ رُسُلًا إِلَى قَوْمِهِمْ فَجَاءُوهُم بِالْبَيِّنَاتِ فَانتَقَمْنَا مِنَ الَّذِينَ أَجْرَمُوا وَكَانَ حَقًّا عَلَيْنَا نَصْرُ الْمُؤْمِنِينَ ﴾

"(நபியே!) நிச்சயமாக உமக்கு முன்னரும் பல தூதர்களை அவர்களுடைய சமூகத்தாரிடம் நாம் அனுப்பினோம்; அவர்களும் தெளிவான சான்றுகளை அவர்களிடம் கொண்டு வந்தார்கள். பின்னர், குற்றம் புரிந்தோரிடம் நாம் பழிவாங்கினோம். மேலும்,

இறைநம்பிக்கையாளர்களுக்கு உதவி செய்வது நம் மீது கடமையாக இருக்கிறது." (அல் குர்ஆன் சூரா அல்-ரூம் 30 : 47)

**இஸ்லாமிய சமூகமே!**

வாழ்க்கையின் பக்கங்கள் நன்மையும் தீமையும், வசதியும் சிரமமும் என மாறிக்கொண்டே இருக்கின்றன. அது மனிதர்களை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் சுழல வைக்கிறது: விசாலமும், சுருக்கமும், மகிழ்ச்சியும், துன்பமும். வாழ்க்கையில் சோதனைகளும், துன்பங்களும், இன்னல்களும் நிறைந்துள்ளன. அல்லாஹ் தன் திருக்குர்ஆனில் கூறுவது போல:

﴿ وَلَنَبْلُوَنَّكُم بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوعِ وَنَقْصٍ مِّنَ الْأَمْوَالِ وَالْأَنفُسِ وَالثَّمَرَاتِ وَبَشِّرِ الصَّابِرِينَ ﴾

"(முஃமின்களே!) பயம், பசி ஆகியவற்றினாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றில் ஏற்படும் நஷ்டத்தைக் கொண்டு நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (இச்சோதனைகளைச் சந்தித்து) சகித்துக்கொண்டிருப்போருக்கு நற்செய்தி கூறுவீராக!" (அல் குர்ஆன் சூரா அல்-பகரா 2 : 155)

அல்லாஹ் இவ்வுலகத்தைப் படைத்தது முதல், அது ஒரே நிலையில் நிலைத்திருப்பதில்லை. மாறாக, அது மனிதர்களைப் பல்வேறு பாதைகளில் மாற்றிக்கொண்டே இருக்கிறது. ஒரு கவிஞர் கூறியது போல்:

ثَمَانِيَةٌ تَجْرِي عَلَى النَّاسِ كُلِّهِمْ ... وَلَا بُدَّ لِلْإِنْسَانِ يَلْقَى الثَّمَانِيَهْ

سُرُورٌ وَحُزْنٌ وَاجْتِمَاعٌ وَفُرْقَةٌ ... وَيُسْرٌ وَعُسْرٌ ثُمَّ سَقَمٌ وَعَافِيَهْ

"எட்டு விஷயங்கள் மனிதர்கள் அனைவர் மீதும் சுழன்று வருகின்றன; மனிதன் இந்த எட்டையும் சந்தித்தே தீர வேண்டும்: மகிழ்ச்சி, துக்கம், ஒன்று கூடுதல், பிரிதல், இலகுவான நிலை, சிரமமான நிலை, நோய் மற்றும் சுகம்."

நாம் இன்று அசாதாரணமான சூழ்நிலைகளிலும், விதிவிலக்கான நெருக்கடிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது இரகசியமல்ல. யுத்தம் என்பது வெறுக்கத்தக்கது, பழிக்கத்தக்கது. மார்க்கம், உயிர்கள், சொத்துக்கள், மானம் மற்றும் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காகக் கட்டாயத்தின் பேரில் அன்றி போரை நோக்கிச் செல்லப்படலாகாது என்கிறது.

அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

«أَيُّهَا النَّاسُ لَا تَتَمَنَّوْا لِقَاءَ الْعَدُوِّ، وَسَلُوا اللهَ الْعَافِيَةَ، فَإِذَا لَقِيتُمُوهُمْ فَاصْبِرُوا، وَاعْلَمُوا أَنَّ الْجَنَّةَ تَحْتَ ظِلَالِ السُّيُوفِ»

"மக்களே! எதிரிகளைச் சந்திப்பதை நீங்கள் விரும்பாதீர்கள்; அல்லாஹ்விடம் நிம்மதியையும் பாதுகாப்பையும் (ஆஃபியா) கேளுங்கள். ஆனால் அவர்களைச் சந்தித்துவிட்டால் பொறுமையாக இருங்கள். அறிந்துகொள்ளுங்கள்: நிச்சயமாக சொர்க்கம் வாள்களின் நிழலின் கீழ் இருக்கிறது." (புகாரி, முஸ்லிம்)

எனவே, மனிதன் தன் மனதிற்குள் ஏதேனும் விரக்தி ஊடுருவுவதை விட்டும் பாதுகாப்பாக இருக்க முடியாது. அந்த விரக்தியானது மன உறுதியை சீர் குலைக்கும், வீரர்களை வீழ்த்தும், உணர்வுகளை உலுக்கும், நம்பிக்கைகளைத் தகர்க்கும். இந்த பாரமான சுமைகளை அகற்றுவதற்கு நமக்கு நன்னம்பிக்கை (தஃபாஉல்) அதிகம் தேவைப்படுகிறது!

இஸ்லாமிய சகோதரர்களே!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலைச் சிந்திப்பவர், அவர்கள் நன்னம்பிக்கை வைப்பதில் காட்டிய ஆர்வத்தைக் காண்பார்கள். அவர்கள் பயம் நிலவும் சூழலில் நற்செய்தி கூறுவார்கள்; விரக்தியும் நம்பிக்கையின்மையும் சூழ்ந்த இடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்துவார்கள்; மனங்கள் சோர்ந்து போகாமல் இருக்க இவ்வாறு செய்வார்கள்.

ஸஹீஹ் அல்-புகாரியில் கப்பாப் பின் அல்-அரத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தேன். அவர்கள் கஃபாவின் நிழலில் தம் போர்வையைத் தலையணையாக வைத்துச் சாய்ந்துகொண்டிருந்தார்கள். அப்போது இணைவைப்பாளர்களிடமிருந்து கடுமையான துன்பங்களை நாங்கள் சந்தித்திருந்தோம். நான், 'அல்லாஹ்வின் தூதரே! எங்களுக்காக அல்லாஹ்விடம் உதவி கேட்கக்கூடாதா?!' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் முகம் சிவந்தவர்களாக எழுந்து உட்கார்ந்து கூறியதாவது:

«لَقَدْ كَانَ مَنْ قَبْلَكُمْ لَيُمْشَطُ بِمِشْطِ الْحَدِيدِ مَا دُونَ عِظَامِهِ مِنْ لَحْمٍ أَوْ عَصَبٍ؛ مَا يَصْرِفُهُ ذَلِكَ عَنْ دِينِهِ، وَيُوضَعُ الْمِنْشَارُ عَلَى مَفْرِقِ رَأْسِهِ فَيُشَقُّ بِاثْنَيْنِ؛ مَا يَصْرِفُهُ ذَلِكَ عَنْ دِينِهِ، وَلَيُتِمَّنَّ اللَّهُ هَذَا الْأَمْرَ حَتَّى يَسِيرَ الرَّاكِبُ مِنْ صَنْعَاءَ إِلَى حَضْرَمَوْتَ مَا يَخَافُ إِلَّا اللَّهَ وَالذِّئْبَ عَلَى غَنَمِهِ»

'உங்களுக்கு முன் வாழ்ந்தவர்களில் ஒருவர் பிடிக்கப்பட்டு, அவருக்கு பூமியில் குழி தோண்டப்பட்டு அதில் அவர் நிறுத்தப்படுவார். பின்னர் ரம்பம் கொண்டுவரப்பட்டு அவரது தலைமீது வைக்கப்பட்டு, அது இரண்டு பிளவுகளாகப் பிளக்கப்படும்; இரும்புச் சீப்புகளால் அவரது எலும்புகளுக்குக் கீழே உள்ள சதைகளும் நரம்புகளும் சீவப்படும்; இதுவெல்லாம் அவரைத் தனது மார்க்கத்திலிருந்து திருப்பியதில்லை. நிச்சயமாக அல்லாஹ் இந்த மார்க்கத்தை நிறைவுசெய்வான்; எந்தளவுக் கென்றால், 'ஸன்ஆ'விலிருந்து 'ஹழ்ரமவ்த்' வரை பயணிப்பவர் அல்லாஹ்வையும், தன் ஆட்டுமந்தையின் மீது ஓநாயையும் தவிர வேறு எதற்கும் பயப்படாமல் பயணிப்பார்'." (ஸஹீஹ் அல்-புகாரி)

இதோ நம் நபி (ஸல்) அவர்கள் சிரமமான காலத்தில், அதிய் பின் ஹாத்திம் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பே, இந்த மார்க்கத்திற்கு வரவிருக்கும் மாபெரும் எதிர்காலத்தைக் குறித்து நற்செய்தி கூறுகிறார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

أَمَا إِنِّي أَعْلَمُ مَا الَّذِي يَمْنَعُكَ مِنَ الْإِسْلَامِ، تَقُولُ: إِنَّمَا اتَّبَعَهُ ضَعَفَةُ النَّاسِ وَمَنْ لَا قُوَّةَ لَهُ؛ وَقَدْ رَمَتْهُمُ الْعَرَبُ، أَتَعْرِفُ الْحِيرَةَ؟» « قُلْتُ: لَمْ أَرَهَا، وَقَدْ سَمِعْتُ بِهَا، قَالَ: «فَوَالَّذِي نَفْسِي بِيَدِهِ؛ لَيُتِمَّنَّ اللَّهُ هَذَا الْأَمْرَ حَتَّى تَخْرُجَ الظَّعِينَةُ مِنَ الْحِيرَةِ حَتَّى تَطُوفَ بِالْبَيْتِ فِي غَيْرِ جِوَارِ أَحَدٍ، وَلَيُفْتَحَنَّ كُنُوزُ كِسْرَى بْنِ هُرْمُزَ»، قُلْتُ: كِسْرَى بْنُ هُرْمُزَ؟! قَالَ: «نَعَمْ؛ كِسْرَى بْنُ هُرْمُزَ، وَلَيُبْذَلَنَّ الْمَالُ؛ حَتَّى لَا يَقْبَلَهُ أَحَدٌ»

"'நீர் இஸ்லாத்தில் இணைவதைத் தடுப்பது எது என்பதை நிச்சயமாக நான் அறிவேன். 'பலவீனமான மக்களும், வலிமையற்றவர்களுமே அவரைப் பின்பற்றுகிறார்கள்; அரபுகள் அனைவரும் அவர்களுக்கு எதிராகத் திரண்டு நிற்கிறார்கள்' என்று நீர் நினைக்கிறீர். உமக்கு 'ஹீரா' தெரியுமா?' என்று கேட்டார்கள். அதற்கு நான், 'நான் அதைப் பார்த்ததில்லை, ஆனால் கேள்விப்பட்டுள்ளேன்' என்றேன். அதற்கு அவர்கள், 'என் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக! நிச்சயமாக அல்லாஹ் இந்த மார்க்கத்தை முழுமையாக்குவான்; எந்தளவுக் கென்றால், ஒரு பெண் ஒட்டகத்தில் தனியாக 'ஹீரா'விலிருந்து புறப்பட்டு, எவருடைய பாதுகாப்பும் இன்றி கஃபாவைத் தவாஃப் செய்வாள். மேலும் 'கிஸ்ரா பின் ஹுர்முஸ்' என்பவனின் பொக்கிஷங்கள் வெற்றி கொள்ளப்படும்' என்றார்கள். நான், 'கிஸ்ரா பின் ஹுர்முஸா?!' எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள், 'ஆம், கிஸ்ரா பின் ஹுர்முஸ்தான். மேலும் செல்வம் எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத அளவுக்குப் பெருக்கெடுக்கும்' என்றார்கள்."

அதிய் பின் ஹாத்திம் (ரழி) கூறினார்கள்: "இதோ ஒரு பெண் ஹீராவிலிருந்து புறப்பட்டு எவருடைய பாதுகாப்பும் இன்றி வந்து

கஃபாவைத் தவாஃப் செய்கிறாள். கிஸ்ரா பின் ஹுர்முஸின் பொக்கிஷங்களை வெற்றி கொண்டவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! மூன்றாவது நற்செய்தியும் நிச்சயம் நடக்கும்; ஏனெனில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதைச் சொல்லியிருக்கிறார்கள்." (இமாம் அக்பத் பதிவு செய்தது, ஷுஐப் அல்-அர்னாஊத் இதனை ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளார்).

அல்லாஹ்வின் அடியார்களே!

உலுக்குகின்ற சூழ்நிலைகளிலும், துன்பங்கள் தீவிரமடையும் போதும் — கந்தக் எனும் அகழ்ப்போரின் போது தன் நம்பிக்கையாளர்களான அடியார்களைப் பற்றி அல்லாஹ் வர்ணித்தது போன்று நிலைமை இருக்கும் வேளையில்:

﴿ إِذْ جَاءُوكُم مِّن فَوْقِكُمْ وَمِنْ أَسْفَلَ مِنكُمْ وَإِذْ زَاغَتِ الْأَبْصَرُ وَبَلَغَتِ الْقُلُوبُ الْحَنَاجِرَ وَتَظُنُّونَ بِاللَّهِ الظُّنُونَا * هُنَالِكَ ابْتُلِيَ الْمُؤْمِنُونَ وَزُلْزِلُوا زِلْزَالًا شَدِيدًا ﴾

"(நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு மேலிருந்தும், உங்களுக்குக் கீழிருந்தும் அவர்கள் உங்களிடம் வந்த போது, பார்வைகள் நிலை குத்தி, இருதயங்கள் தொண்டைக் குழிகளை அடைந்து, அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் பலவிதமான எண்ணங்களை எண்ணிக்கொண்டிருந்த நேரத்தை நினைத்துப் பாருங்கள். அங்கே நம்பிக்கையாளர்கள் சோதிக்கப்பட்டார்கள்; கடுமையான உலுக்குதலாக உலுக்கப்பட்டார்கள்." (அல் குர்ஆன் சூரா அல்-அஹ்ஸாப் 33 : 10 - 11)

அத்தகைய நேரத்திலும், மறைவானவற்றை அறிபவன் மீது பொறுப்பைய ஒப்படைத்து (தவக்குல் செய்து), போருக்கான சாத்தியமான வழிமுறைகளைக் கையாண்ட பிறகு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் உள்ளங்களில் நன்னம்பிக்கையை ஆழமாகப் பதிப்பவர்களாக இருந்தார்கள்.

ஈமான் கொண்ட மனிதர்கள் இப்படித்தான் செயல்படுவார்கள்: அவர்கள் வேதனையை நம்பிக்கையாகவும், விரக்தியை நன்னம்பிக்கையாகவும், நெருக்கடியை விசாலமாகவும், சோதனைகளை அருள்களாகவும் மாற்றுவார்கள். இதனால் சிரமங்கள் மற்றும் கஷ்டங்கள் மத்தியிலும் வாழ்க்கை இனிமையாகிறது!

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَاصْبِرْ وَمَا صَبْرُكَ إِلَّا بِاللَّهِ وَلَا تَحْزَنْ عَلَيْهِمْ وَلَا تَكُ فِي ضَيْقٍ مِمَّا يَمْكُرُونَ ﴾

"(நபியே!) நீர் பொறுமையைக் கடைப்பிடிப்பீராக! உமது பொறுமை அல்லாஹ்வைக் கொண்டேயன்றி சாத்தியமில்லை. அவர்களுக்காக நீர் கவலைப்பட வேண்டாம்; அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளினால் நீர் மன நெருக்கடியிலும் ஆகிவிட வேண்டாம்." (அல் குர்ஆன் சூரா அந்-நஹ்ல்16 : 127)

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் கண்ணியமிக்க குர்ஆனில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் ஞானமிக்க நினைவூட்டல்கள் மூலம் எனக்கும் உங்களுக்கும் பயனளிப்பானாக! எனது இந்த உரையை நான் கூறி, எனக்காகவும் உங்களுக்காகவும் கண்ணியமிக்க அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்; நீங்களும் அவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள்; நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவனும் நிகரற்ற அன்புடையவனுமாவான்.

இரண்டாவது உரை

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. உயர்ந்தோனாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என நான் சாட்சியமளிக்கிறேன். நமது நபி முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும், தூதரும், அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவருமாவார் என்றும் சாட்சியமளிக்கிறேன். அல்லாஹ் அவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும், அவரை நேசிப்போருக்கும் அருளும் சாந்தியும் பொழிவானாக!

இறைதுதிக்குப் பின்னர் :

அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன் விரும்புபவை மற்றும் திருப்தியடைபவற்றின் மூலம் அவனிடம் நெருங்குங்கள். அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை விடவும், அவனது அடியார்களுக்கு நன்மை செய்வதை விடவும்

அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது எதுவுமில்லை. இவ்விரண்டையும் செய்பவரை அல்லாஹ் ஒருபோதும் கைவிடமாட்டான்.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَلَيَنصُرَنَّ اللَّهُ مَن يَنصُرُهُ إِنَّ اللَّهَ لَقَوِيٌّ عَزِيزٌ * الَّذِينَ إِن مَّكَّنَّهُمْ فِي الْأَرْضِ أَقَامُوا الصَّلَوٰةَ وَآتَوُا الزَّكَوٰةَ وَأَمَرُوا بِالْمَعْرُوفِ وَنَهَوْا عَنِ الْمُنكَرِ وَلِلَّهِ عَاقِبَةُ الْأُمُورِ ﴾

"தனக்கு (தன் மார்க்கத்திற்கு) உதவி செய்பவருக்கு நிச்சயமாக அல்லாஹ்வும் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வல்லமை மிக்கவனும், மிகைத்தவனுமாவான். அவர்களுக்கு நாம் பூமியில் அதிகாரமளித்தால், அவர்கள் தொழுகையைக் கடைப்பிடிப்பார்கள், ஜகாத்தைக் கொடுப்பார்கள், நன்மையை ஏவுவார்கள், தீமையைத் தடுப்பார்கள். காரியங்களின் முடிவு அல்லாஹ்வுக்கே உரியது." (அல் குர்ஆன் சூரா அல்-ஹஜ்ஜு 22 : 40 - 41)

அபுதர்தாவு (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன்:

«ابْغُونِي ضُعَفَاءَكُمْ؛ فَإِنَّكُمْ إِنَّمَا تُرْزَقُونَ وَتُنصَرُونَ بِضُعَفَائِكُمْ»

"பலவீனமானவர்களை எனக்குத் தேடித்தாருங்கள். ஏனெனில், உங்களிலுள்ள பலவீனமானவர்களின் காரணத்தினாலேயே நீங்கள் உணவளிக்கப்படுகிறீர்கள் மற்றும் உதவி அளிக்கப்படுகிறீர்கள்." (இமாம் அக்பத் பதிவு செய்தது, ஷுஐப் அல்-அர்னாஊத் இதனை ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளார்).

ஈமான் கொண்ட சகோதரர்களே!

சமுதாயத்தின் நிலையைப் பற்றி எதிர்மறையாகவும் நம்பிக்கையின்றியும் பேசுவது முஸ்லிம்களின் மன உறுதியைக் குலைக்கும்; துக்கத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தும். எனவே, பலவீனமான வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்வதையோ அல்லது அல்லாஹ்வைப் பற்றி தவறான எண்ணம் கொள்வதையோ தவிர்க்கவும். அல்லாஹ்வைக் குறித்து தவறாக எண்ணாதீர்கள்.

அல்லாஹ் யாரைக் கடிந்து கொண்டானோ அவர்களைப் போல் ஆகிவிடுவதை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள். அல்லாஹ் கூறுகிறான்:

﴿ بَلْ ظَنَنتُمْ أَن لَّن يَنقَلِبَ الرَّسُولُ وَالْمُؤْمِنُونَ إِلَى أَهْلِيهِمْ أَبَدًا وَزُيِّنَ ذَٰلِكَ فِي قُلُوبِكُمْ وَظَنَنتُمْ ظَنَّ السَّوْءِ وَكُنتُمْ قَوْمًا بُورًا ﴾

"மாறாக, இந்தத் தூதரும் இறை நம்பிக்கையாளர்களும் தங்கள் குடும்பத்தாரிடம் ஒருபோதும் திரும்பி வரமாட்டார்கள் என்று நீங்கள் எண்ணினீர்கள்; அது உங்கள் இருதயங்களில் அழகாகக் காட்டப்பட்டது; நீங்கள் தவறான எண்ணத்தைக் கொண்டீர்கள்; அழியும் கூட்டத்தாராக ஆகிவிட்டீர்கள்." (அல் குர்ஆன் சூரா அல்-ஃபத்ஹ் 48 : 12)

(இங்கு 'பூரா' (بُورًا) என்பது 'பாஇர்' என்ற சொல்லின் பன்மையாகும்; இதற்கு அழிந்தவன், நம்பிக்கையற்றவன், தோற்றுப்போனவன் என்று பொருள்).

ஸஹீஹ் முஸ்லிமில் அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

«إِذَا قَالَ الرَّجُلُ: هَلَكَ النَّاسُ؛ فَهُوَ أَهْلَكُهُمْ»

"ஒரு மனிதன் 'மக்கள் அழிந்துவிட்டார்கள்' என்று கூறினால், அவனே அவர்களில் மிகவும் அழிந்தவன் (அல்லது அவர்களை அழிப்பவன்) ஆவான்." (முஸ்லிம்)

• யா அல்லாஹ்! ஈமானை எங்களுக்குப் பிரியமானதாக ஆக்குவாயாக! அதை எங்கள் இருதயங்களில் அழகாக்குவாயாக! குஃப்ர் (இறைநிராகரிப்பு), ஃபுஸூக் (பாவங்கள்), இஸியான் (மாறுசெய்தல்) ஆகியவற்றை எங்களுக்கு வெறுக்கத்தக்கதாக ஆக்குவாயாக! எங்களைச் சரியான வழியில் நடப்போரில் ஆக்குவாயாக!

• யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது மார்க்கத்திற்கும், உனது வேதத்திற்கும், உனது நபியின் சுன்னாவுக்கும், உனது இறைநம்பிக்கையாளர்களான அடியார்களுக்கும் வெற்றி அளிப்பாயாக!

• யா அல்லாஹ்! முஸ்லிம்களான ஆண்களையும் பெண்களையும், மூஃமின்களான ஆண்களையும் பெண்களையும் அவர்களில் உயிரோடு இருப்பவர்களையும், மரணித்தவர்களையும் மன்னிப்பாயாக!

• யா அல்லாஹ்! குவைத்தையும் அதன் மக்களையும் அனைத்துத் தீங்குகளிலிருந்தும் சதிகளிலிருந்தும் பாதுகாப்பாயாக! இந்நாட்டையும் ஏனைய அனைத்து முஸ்லிம் நாடுகளையும் பாதுகாப்பானதாகவும் அமைதியானதாகவும் ஆக்குவாயாக!

• யா அல்லாஹ்! எல்லையில் விழிப்புடன் இருக்கும் நமது சகோதரர்களையும், பாதுகாப்புப் படையினர், பாதுகாப்புத் துறை, தேசியக் காவல் படை, தீயணைப்புத் துறை மற்றும் நாட்டின் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாதுகாப்பாயாக! அவர்களின் பாதங்களை உறுதியாக்குவாயாக!

• யா அல்லாஹ்! எங்கள் நாட்டின் அமீர் (அதிபர்) அவர்களுக்கும், அவர்களின் இளவரசருக்கும் நீ விரும்பக்கூடிய மற்றும் திருப்தியடையக்கூடிய காரியங்களுக்குத் தவ்ஃபீக் செய்வாயாக! நன்மை மற்றும் தக்வாவின் பால் அவர்களின் கரங்களைப் பிடித்து வழிநடத்துவாயாக!

எங்களின் கடைசிப் பிரார்த்தனையானதும் அனைத்துப் புகழும் அகிலங்களின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது என்பதாகும்!

(வெள்ளிக்கிழமை தொழுகைக்கான மாதிரி குத்பா தயாரிப்புக் குழு)